2016 ஜனவரி 22]

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு, மின் வெட்டே கிடையாது. அனைத்தும் சிறப்பான முறையில் இருந்து வருகிறது. மின்சாரம் கொடுக்க முடியாத இடங்களிலும் genset வைத்து மின்சாரம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே, நீங்கள் சொல்லும் இடங்களில், நமது துறை அதிகாரிகள்மூலம் ஆய்வு செய்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்குக் கொண்டு செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 25, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.ஏ. கருப்பசாமி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

25—

கால்நடை மருத்துவமனை

***59799 திரு. ஏ.ஏ. கருப்பசாமி:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், அவினாசி வட்டம், குட்டகம் ஊராட்சி, குட்டகத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருப்பூர் மாவட்டம், அவினாசி வட்டம், குட்டகம் ஊராட்சி, குட்டகத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா என்று கேட்டிருக்கிறார்கள். அரசு விதிகளின்படி, நேரடியாக கால்நடை மருத்துவமனையை அமைக்க முடியாது. முதலில் கால்நடை கிளை நிலையம் அமைக்கப்பட்டு,

அது மருந்தகமாகத் தரம் உயர்த்தப்பட்டு, அதற்குப் பின்னர்தான் மருத்துவமனை அமைக்க முடியும். ஆனால், உறுப்பினர் கேட்டிருக்கின்ற அந்தக் கிராமத்தைச் சுற்றியுள்ள கால்நடை அலகுகளின் எண்ணிக்கை 3,000-க்கும் அதிகமாக உள்ளதால், மாண்புமிகு அம்மா அவர்களது ஆணை பெற்று, அங்கு ஒரு கால்நடை கிளை நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.ஏ. கருப்பசாமி அவர்கள்.*

திரு. ஏ.ஏ. கருப்பசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 6-வது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்க உள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களைப் பணிந்து வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அவினாசி வட்டம், குட்டகத்தில் கால்நடைகள் அதிகமாக உள்ள காரணத்தினால் கால்நடை கிளை நிலையம் அமைத்துத் தருவேன் என்று சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் அந்தப் பகுதி மக்களின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 26, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அருண் சுப்பிரமணியன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

26—

ஜவுளிப் பூங்கா

***54755—திரு. மு. அருண் சுப்பிரமணியன்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்தணி தொகுதி, ஆர்.கே. பேட்டை ஒன்றியம், அம்மையார்குப்பத்தில் ஜவுளிப் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர்*